# ஒரு மன்னிப்பு மன்னிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலொழிய, அது ஒரு மன்னிப்பாகாது



ஆபிரகாம் லிங்கன்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

*செய்தி:* **வாசல்களுக்குள்ளே வாசல்கள்,** பிப்ரவரி 6, 1965

89. திரு. லிங்கன். ஒரு மனிதன், ஒரு வாலிப நபர், அவன்அவன் யுத்தத்தில் இருந்தான். மேலும் அவன் துவக்கத்திலேயே கோழையாயிருந்தான். எனவே கடமையின் நேரத்தில் அவன் - அவன் - அவன் தன்னை போர் படையிலிருந்து விலக்கிக் கொண்டான். எனவே அவர்கள் அவனுக்கு விரோதமாக ஏதோ காரியத்தை கண்டுபிடித்தனர். ஆகையால் அவன் சுட்டுக் கொல்லப்படப் போவதாக இருந்தான். ஓ, அவன் ......... அது பயங்கரமாயிருந்தது. அப்பொழுது அவனை மிகவும் நேசித்த ஒரு வாலிப நபர் ஒரு மன்னிப்பு கடிதத்தைப் பெறும்படி திரு. லிங்கனண்டைக்குச் சென்றான். அந்த நேரத்தில் அவர் இங்கே ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாக இருந்தார். எனவே அவன் மன்னிப்பிற்காக அவரிடம் சென்றான்.

90. அவர் தன்னுடைய வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தபோது அவன் அவரிடம் கூறினான்: திரு. லிங்கன் அவர்கள் உயரமானவராயும், தாடியுடையவராயும், தெற்கத்தியர்களின் பாணியில், ஒல்லியான உருவம் கொண்டவராயும் இருப்பார். அவன், “திரு. லிங்கன்

அவர்களே, இன்னும் இரண்டு நாட்களில் ஒரு பையன் சுட்டு கொல்லப்படப் போவதாக இருக்கிறான். ஏனென்றால், அவன் யுத்த நேரத்தில் ஓடிவிட்டான்" என்றான். அப்பொழுது அவன், "திரு. லிங்கள் அவர்களே, அந்தப் பையன் ஒரு மோசமான பையன் அல்ல. ஆனால் துப்பாக்கிக் குண்டுகளால் சுடப்பட்டு, ஜனங்கள் மரித்ததைக் கண்டு அவன் பயமடைந்துவிட்டான். அவன் மிகவும் நிலைகுலைந்தவனாக, அவன் தன்னுடைய கரங்களை மேலே தூக்கியவாறு கூச்சலிடத் துவங்கினான்" என்றான். ஆனால், "நான் அந்த பையனை அறிந்திருக்கிறேன்" என்றான். மேலும் அவன், "திரு. லிங்கன் அவர்களே, இந்த துண்டு காகிதத்தின் மேல் உள்ள உங்கள் பெயரினால் மட்டுமே அவனை காப்பாற்ற முடியும். எனவே நீர் அதைச் செய்வீரா?" என்று கேட்டான்.

91. உண்மையான, இந்த கிறிஸ்தவ பெருந்தகையாளர் உடனடியாக அந்த காகிதத்தில் "இன்னார் - இன்னாரை" மன்னிக்கிறேன் என்று எழுதி கையெழுத்திட்டார். மேலும், "ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதி, ஆபிரகாம் லிங்கன்" என்று தன்னுடைய பெயரை கையொப்பமிட்டார்.

92. செய்தியாளனோ, தன்னால் முடிந்த அளவு துரிதமாக அதைக் கொண்டு சென்றான்.

அவன் அந்த சிறைக்கூட தனியறைக்கு ஓடி, "நீ விடுதலையாகிவிட்டாய்! நீ விடுதலையாகி விட்டாய்! இதோ இருக்கிறது திரு. லிங்கனுடைய, திரு. லிங்கனுடைய கையெழுத்து, நீ விடுதலையாகிவிட்டாய்" என்றான்.

93. அப்பொழுது அவன், "நாளை நான் மரிக்கப் போகிறேன் என்பதை அறிந்தும், நீ ஏன் என்னை பரியாசம் செய்ய வந்திருக்கிறாய்?" என்றான். மேலும் அவன், "அதை இங்கிருந்து கொண்டு போ, நீ மாத்திரமே என்னை பரியாசம் செய்து கொண்டிருக்கிறாய்" என்றான். அவன் அதை ஏற்றுக்கொள்ள மனதாயில்லை. அவன், "வேண்டாம், எனக்கு - எனக்கு அது தேவையில்லை" என்றான். அவன், "நீ மாத்திரம் பரியாசம் செய்து கொண்டிருக்கிறாய் ......" என்றான். மேலும் அவன், "அது ஜனாதிபதி கையெழுத்தாக இருந்தால், அப்பொழுது அதில் அரசாங்க முத்திரைகள் இருந்திருக்குமே, அது அவருடைய சரியான தாளில் இருந்திருக்குமே" என்றான்.

இவனோ, "ஆனால் இது அவருடைய கையெழுத்துத்தான்" என்றான்.

94. அப்பொழுது அவன், "நான் எப்படி அவருடைய கையெழுத்தை அறிந்துகொள்வேன்?"

என்று கேட்டான். மேலும் அவன், “நீ என்னை வெறுமனே பரியாசம் பண்ணிக் கொண்டிருக்கிறாய் என்றும், நீ என்னை சாந்தப்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறாய்” என்றும் கூறினான். பின்னர் அவன் அப்படியே கூச்சலிடத் துவங்கி தன்னுடைய முதுகை திருப்பிக் கொண்டான். பின்னர் அடுத்த நாள் காலை அந்தப் பையன் சுட்டுக் கொல்லப்பட்டான்.

95. அவன் மன்னிக்கப்பட்டான் என்று ஜனாதிபதியினுடைய பெயர் இந்தத் துண்டுத்தாளில் இருந்தபோதும், அந்தப் பையன் கொல்லப்பட்டிருக்கிறான். அப்படியானால் என்ன? அவர்கள் அதற்காக தலைமை வழக்கு மன்றத்தில் வழக்கு தொடுத்தனர். அப்பொழுது நம்முடைய தலைமை நீதிமன்றத்தின் தீர்மானம் இவ்வாறிருந்தது. நம்முடைய நீதிமன்றங்கள் யாவற்றிற்கும் அதுவே கடைசி முடிவாக இருக்கிறது. சில நேரங்களில் அவர்கள் கூறுகிறதை, நாம் அவர்களுடைய தீர்மானத்தை விரும்புகிற தில்லை. ஆனாலும் நாம் எப்படியிருந்தாலும் அதனைக் கொண்டே நிலைத்திருக்க வேண்டிய வர்களாயிருக்கிறோம். பாருங்கள், ஏனென்றால் அதுவே கட்டுக் கம்பமாய் இருக்கிறது. அதுவே கடைசி முடிவாயிருக்கிறது. இப்பொழுது அதில்

கூறப்பட்ட தீர்மானம் என்னவெனில், "**ஒரு மன்னிப்பு மன்னிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலொழிய, அது ஒரு மன்னிப்பாகாது**" என்பதேயாகும்.

96. **அந்த விதமாகவே தேவனுடைய வார்த்தையும் இருக்கிறது. அது ஒரு மன்னிப்பாக ஏற்றுக்கொள்ளப்படுமானால், அது ஒரு மன்னிப்பாயிருக்கிறது. அதை விசுவாசித்து அதை ஏற்றுக்கொள்பவர்களுக்கு அது தேவனுடைய வார்த்தையாயும், தேவனுடைய வல்லமையுமாயிருக்கிறது.**

97. நீங்கள் அதை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்து, "ஓ, அது சிக்கிக்கொண்டுள்ளது, மேலும் அது இலட்சக்கணக்கான மொழி பெயர்ப்புகளை உடையதாய் இருந்து வருகின்றது" என்று நீங்கள் கூறினாலும் கவலைப்படுவதற்கில்லை. அது யாரோ ஒருவருக்காக இருக்கலாம்.

98. **ஆனால் எனக்கோ அது இன்னமும் தேவனுடைய வார்த்தையாகவே இருக்கிறது. "இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும்**

மாறாதவராயிருக்கிறார்". அவர் அந்த வார்த்தையைக் கொண்டு தரித்திருக்க கடமைப்பட்டவராயிருக்கிறார்.

99. இப்பொழுது அவர் ஓர்நாள் சபையை நியாயந்தீர்க்க வேண்டியவராயிருக்கிறார். **அவர் அதை கத்தோலிக்க சபையைக் கொண்டு நியாயந்தீர்ப்பார் என்று அவர்கள் கூறுவார்களேயானால் அப்பொழுது அவர் கத்தோலிக்க சபைகளில் எந்த ஒன்றைக்கொண்டு நியாயந்தீர்ப்பார்? அவைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக உள்ளதே. அவர் அதை மெத்தோடிஸ்டுகளைக் கொண்டு நியாயந்தீர்ப்பாரேயானால், அப்பொழுது பாப்டிஸ்டுகளாகிய நீங்கள் இழக்கப்படுவீர்கள். அவர் அதை பெந்தேகோஸ்துக்களைக் கொண்டு நியாயந்தீர்ப்பாரேயானால் அப்பொழுது மீதமுள்ள நீங்கள் இழக்கப்படுவீர்கள்.**

100. **ஆனால் அவர் அதை சபையைக் கொண்டு நியாயந்தீர்க்க மாட்டார். வேதம், "அவர் உலகத்தை இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நியாயந்தீர்ப்பார். ஏனெனில்**

**கிறிஸ்து வார்த்தையாக இருக்கிறார்" என்று கூறியுள்ளது.** ஆகையால் நீங்கள் பாருங்கள், **நாம் சாக்குப்போக்கு கூறமுடியாதவர்களாக இருக்கிறோம். அது தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. அதனைக் கொண்டே அவர் நம்மை நியாயந்தீர்ப்பார். அது எவ்வளவு சிறியதானாலும் அது ஒரு பொருட்டல்ல. வெளிப்படுத்தின விசேஷம் 22:18ல் ஒரு வார்த்தை எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்று கூறப்பட்டுள்ளது.**

*(இந்த மேற்கோள் ஏற்கனவே தமிழில் வந்த செய்தியிலிருந்து எடுக்கப்பட்டது.)*